सत्यमेव जयते

# भारत का राजपत्र
# The Gazette of India
# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

**भाग XV अनुभाग 1**

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

**नई दिल्ली, सुक्रवार, 5 फरवरी, 1999/1921 सका**

New Delhi, Friday, 5th February 1999/1921 Saka

புது தில்லி, வெள்ளிக்கிழமை 5, பிப்ரவரி 1999/1921 சக

## Ministry of Law, Justice and Company Affairs

(Legislative Department)

**சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்**

*(சட்டமியற்றுத் துறை)*

The translation in Tamil of the Cattle Trespass Act, 1871 (1 of 1871), The Agricultural Produce (Grading and Marking Act, 1937 (1 of 1937) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) Section 2 of the Authoritive Texts (Central Laws) act, 1973 (50 of 1973).

கால்நடை அத்துமீறல் சட்டம், 1871 (1/1871), வேளாண் விளைபொருள் (தரப்படுத்துதல் மற்றும் குறியிடுதல்) சட்டம், 1937 (1/1937), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு, குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியானவாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன்பிரிவு 2இன் கூறு (அ) வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price : Rs. 10.00

# கால்நடை அத்துமீறல் சட்டம், 1871

## (சட்ட எண் 1/1871)

[1871, ஜனவரி 13]

**கால்நடை அத்துமீறல் தொடர்பான சட்டத்தை ஒருங்கிணைப்பதற்கும் திருத்தம் செய்வதற்குமான ஒரு சட்டம்.** முகப்புரை.

கால்நடை அத்துமீறல் தொடர்பான சட்டத்தை ஒருங்கிணைப்பதும் திருத்தம் செய்வதும் உகந்ததாக இருப்பதால், ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது:—

## அத்தியாயம் I

## முன்னுரை

1. (1) இந்தச் சட்டம், கால்நடை அத்துமீறல் சட்டம், 1871 என வழங்கப்பெறும்; மற்றும் தலைப்பும் அளாவுகையும்.

(2) இது, 1956, நவம்பர் 1க்கு ஒட்டி முன்பாக பகுதி ஆ மாநிலங்களில் அடங்கியிருந்த ஆட்சி நிலவரைகள் நீங்கலாகவும், மாகாணத் தலைநகரங்களும், மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, அவ்வப்போது அதன் செயற்பாட்டிலிருந்து நீக்கலாகும் உள்ளாட்சிப் பரப்பிடங்கள் நீங்கலாகவும் உள்ள இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

2. [நீக்கறவு செய்யப்பட்டது.]

3. இந்தச் சடடத்தில்— பொருள்கோள் கூறு.

"காவல் துறை அலுவலர்" என்பது, ஊர்காவலரையும் உள்ளடக்கும், மற்றும் "கால்நடை" என்பது, யானைகள், ஒட்டகங்கள், எருமைகள், குதிரைகள், பெண் குதிரைகள், காயடிக்கப்பட்ட குதிரைகள், மட்டக் குதிரைகள், ஆண் குதிரைக் குட்டிகள், பெண் குதிரைக் குட்டிகள், கோவேறு கழுதைகள், கழுதைகள், பன்றிகள், செம்மறிக் கடாக்கள், பெண் செம்மறியாடுகள், செம்மறியாடுகள், செம்மறியாட்டுக்குட்டிகள், வெள்ளாடுகள் மற்றும் வெள்ளாட்டுக் குட்டிகளையும் கூட உள்ளடக்கும், மற்றும்

"உள்ளாட்சி அதிகார அமைப்பு" என்பது, குறித்துரைக்கப்பட்ட உள்ளாட்சிப் பரப்பிடத்திற்குள் பொருட்பாடுகள் எவற்றையும் கட்டாள்கை செய்து நிர்வகிக்கும் அதிகாரமானது, சட்டத்தினால் அப்போதைக்குச் சூட்டப்பட்டுள்ள நபர்களின் குழுமம் எதுவும் என்று பொருள்படும்; மற்றும்

"உள்ளாட்சி நிதியம்" என்பது, ஓர் உள்ளாட்சி அதிகார அமைப்பின் கட்டாள்கையின் அல்லது மேலாண்மையின் கீழ் உள்ள நிதியம் எதுவும் என்று பொருள்படும்.

## அத்தியாயம் II

## பட்டிகளும் பட்டிக்காப்பாளர்களும்

4. மாநில அரசாங்கத்தின் பொதுவான கட்டாள்கைக்கு உட்பட்டு, அவ்வப்போது, மாவட்டக் குற்றவியல் நடுவர் பணிக்கிற இடங்களில் பட்டிகள் நிறுவப்படுதல் வேண்டும். பட்டிகளை நிறுவுதல்.

எந்த ஊரினால் பட்டி ஒவ்வொன்றும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை அந்த மாவட்டக் குற்றவியல் நடுவர் தீர்மானித்தல் வேண்டும்.